நகர்மன்றம்,
உதகமண்டலம்,
**25.07.2023.**

அன்புடையீர்,

வணக்கம், இந்நகர்மன்ற ஜீலை **2023**ம் மாத சாதாரண கூட்டம் வருகின்ற **31.07.2023**, திங்கட்கிழமை அன்று காலை **11.00** மணியளவில் நகரமன்ற தலைவர் திருமதி.எம்.வாணீஸ்வரி அவர்களின் தலைமையில் நகர்மன்ற கூட்டத்தில் நடைபெறுவதால் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் மேற்பட கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப்பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**<u>முன்னிலை : திருமதி.எம்.வாணீஸ்வரி, நகர மன்ற தலைவர்</u>**

1. இந்நகராட்சி அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் 1 சுருக்கெழுத்து தட்டச்சர் மற்றும் 3 தட்டச்சர் பணியிடங்கள் பல ஆண்டுகளாக காலியாக உள்ளது.

இந்நகராட்சி அனைத்து பிரிவுகளிலும் அலுவலக பணிகள் தொடர்பாக தட்டச்சு செய்தல், பொது நலபிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு விபரங்கள் பதிவு செய்தல், திடக்கழிவு மேலாண்மை குறித்த அறிக்கை பட்டியல், நகரமைப்பு பிரிவில் வழக்குகள், கூஷஞடு–ருயீனயவடிஇ, தேர்தல் பணிகள், ருஹடு கட்டிடங்கள் தொடர்பான பணிகள், நகர்மன்ற பொருள் தட்டச்சு செய்தல் மற்றும் முதலமைச்சரின் தனி பிரிவு மனு தொடர்பாக தட்டச்சு செய்தல், கணக்கு மற்றும் தணிக்கை அறிக்கை தயார் செய்தல் போன்ற அத்தியாவசிய பணிகள் உரிய காலத்தில் தட்டச்சு செய்து உயர் அதிகாரிகள் அலுவலவகத்திற்கு அனுப்ப வேண்டியுள்ளதால்,ஒப்பந்தப்புள்ளி கோரி தனி அலுவலர் மன்ற தீர்மான எண்–2462, நாள்–25.01.2021ல் அனுமதி பெற்று,திருவாளர்.ஸ்டார் கான்ராக்டர், உதகை என்ற தனியார் வெளிக்கொணர்வு நிறுவனத்திற்கு பணி உத்தரவு 01.01.2021ம் தேதியில் வழங்கப்பட்டது.

மேற்படி நிறுவனத்திற்கான பணி உத்தரவு காலம் வரும் 05.08.2023ம் தேதியுடன் முடிவடைய இருப்பதால்,ஆணையாளர் அவர்களின் நேரடி அறிவுரையின் படியும் தட்டச்சர் பணியிடங்கள் காலியாகவே உள்ள நிலையில் பணியின் முக்கியத்துவத்தை முன்னிட்டு நிர்வாக நலன் கருதி அடுத்து ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கும் வரை தற்போது பணி செய்து வரும் மேற்படி தனியார் நிறுவனத்தின் பணி உத்தரவினை ஏற்கனவே வழங்கி வரும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அங்கீகரித்துள்ள விலை விகிதத்திலேயே 06.08.2023 முதல் 05.11.2023 வரை முன்று மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்து வழங்கவும், மேற்காணும் பணிக்காகும் உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு–**

1. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்காணும் பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சத்தினை இந்நகராட்சியின் வருவாய் மற்றும் முலதன நிதியின் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்–எச்1/11527/2019)

2. இந்நகராட்சி அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் 1 சுருக்கெழுத்து தட்டச்சர் மற்றும் 3 தட்டச்சர் பணியிடங்கள் பல ஆண்டுகளாக காலியாக உள்ளது.

இந்நகராட்சி அனைத்து பிரிவுகளிலும் அலுவலக பணிகள் தொடர்பாக தட்டச்சு செய்தல் மற்றும் நகரமைப்பு பிரிவில் உள்ள வழக்குகள் ருஹஊ கட்டிடங்கள் தொடர்பான பணிகள் நகர்மன்ற பொருள் தட்டச்சு செய்தல் மற்றும் முதலமைச்சரின் தனி பிரிவு மனு தொடர்பாக தட்டச்சு செய்தல் கணக்கு மற்றும் தணிக்கை அறிக்கை தயார் செய்தல் போன்ற அத்தியாவசிய பணிகள் உரிய காலத்தில் தட்டச்சு செய்து அனுப்ப வேண்டியுள்ளதால் மேற்படி 3 நபர்கள் நடைமுறையில் உள்ள பட்சத்தில் நகராட்சியில் பணிச்சுமை காரணமாக மேலும் ஆள் பற்றாக்குறையின் காரணமாகவும் தற்காலிக தட்டச்சர் ஒருவரை பணியமர்த்த , மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நிர்ணயித்த விலை விகிதத்தில் நாள் ஒன்றுக்கு ரூ. 740/– வீதம் நுளுஐ.1.75/– நுஞுகு.12.00/– மற்றும் நிர்வாக செலவினம் 10 சதவீதம் சேர்ந்து ஒரு நபருக்கு ரூ. 740/– வீதம் ஒரு வருடத்திற்கு ரூ. 2,70,100/– தொகையாகும் மேற்படி அவசர அவசியம் கருதி நடைமுறையில் திருவாளர்.ஸ்டார் கான்ராக்டர், உதகை அவர்களுக்கு ஏற்கனவே நடைமுறையில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அறிவிப்பு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.,

**அலுவலகக் குறிப்பு–**

பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்–எச்1/11527/2019)

3. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் தூய்மைப் பணிகள் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு 2023–2024 ஆம் ஆண்டிற்கான தேவையான உபகரணங்கள் கூடை , துடைப்பம், பெரிய மண் வெட்டி, சிறிய மண் வெட்டி, சவுல் கொத்து, கடப்பாறை,பல்ரேக்,பட்டை ரேக்,கையுறை, போன்ற தளவாடை பொருட்கள்

உபகரணங்கள் வாங்கி வழங்க தோராய மீதிப்பீட்டு செலவினம் ரூ.9.90/–இலட்சத்திற்கு .இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.,

அலுவலக குறிப்பு–

பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்–361/2019/எச்2)

4. உதகமண்டலம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் வாகனங்களுக்கு போதுமான ஓட்டுநர்கள் இல்லாததால் பொது சுகாதார பிரிவில் பணிகள் தொய்வு இல்லாமல் பணிகளை மேற்கொள்ள டெக்ஸ்கோ நிறுவனம் மூலம் தினக்கூலி அடிப்படையில் இரண்டு ஓட்டுநர்கள் பணியமர்த்தப்பட்டு அதற்கான செலவினத்திற்கு நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள நகர மன்ற தீர்மான எண்–175, நாள்–30.04.2013ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே, 2022 முதல் 2024 வரைக்கான மேற்கொள்ளப்படும் தோராய செலவினம் ரூ.11,00,000/–(பதினொறு இலட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்–2460/2013/எச்2)

5. இந்நகராட்சிக்கு சொந்தமான உட்புற சந்தை மற்றும் வெளிப்புற சந்தை கடைகளில் கடை வாடகை தொகை செலுத்தமால் அதிகம் நிலுவை வைத்திருந்து 756 கடைகளுக்கு கடந்த 25/08/2021 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டதில் 96 கடைகளின் குத்தகைதாரர்கள் வாடகை நிலுவைத் தொகையை செலுத்தாத காரணத்தினால் நிலுவை தொகையை செலுத்தக்கோரி 28/09/2021 மற்றும் 28/10/2021ஆகிய தேதிகளில் அறிவிப்புகள் சார்வு செய்தும் வாடகை நிலுவை தொகையை செலுத்தாத குத்தகைதாரர்களின் குத்தகை உரிமம் இரத்து செய்யப்பட்டு அவர்களின் கடைகள் நகராட்சி வசம் எடுக்கப்பட்டுபொது ஏலம் விடப்பட்டு வருகிறது.

மேற்படி 96 கடைகளுக்கான வாடகை தொகையை 01/11/2021 முதல் கணணியில் எழுப்பாமல் நிறுத்தி வைக்க இந்நகரமன்ற தீர்மானம் எண்.2787 நாள் 29/10/2021ல் அனுமதி பெறப்பட்டதை அடுத்து 01/11/2021 முதல் இக்கடைகளுக்கான கேட்பு எழுப்பப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

96 கடைகளின் குத்தகைதாரர்களுக்கும் கடந்த 29/03/2022 அன்று சட்டமுறை அறிவிப்புகள் இந்நகராட்சியின் சட்ட ஆலோசகரை கொண்டு தயாரிக்கப்பட்டு நிலுவைதாரர்களுக்கு சார்வுசெய்யப்பட்டதில் 64 கடைகளின் குத்தகைதாரர்களின் இருப்பிடம் குறித்த விபரங்கள் அறிய முடியாத காரணத்தினால் அறிவிப்புகள் சார்வு செய்யப்படாமல் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து மேற்படி குத்தகைதாரர்களின் இருப்பிட விபரங்களை விசாரணை செய்து அறிக்கை வழங்க அறிவுறுத்தி காவல்துறைகண்காணிப்பாளர், உதகை மற்றும் காவல் ஆய்வாளருக்கு கடந்த 05/12/2022ல் கடிதம் அனுப்பப்பட்டும் நாளது தேதி வரை குத்தகைதாரர்கள் இருப்பிடம் குறித்து எந்த ஒரு தகவல் கிடைக்கப்பெறவில்லை.

இதற்கிடையில் இந்நகராட்சியின் சந்தை வருவாய்உதவியாளர், சிறப்பு வருவாய் ஆய்வாளர் மற்றும் உதவி வருவாய் ஆய்வாளர் ஆகியார் கடந்த 07/12/2022 அன்று வழங்கிய குறிப்பில் வரி விதிப்பு எண்கள். 068/2099, 068/2100, 068/2101, 068/1571, 068/1570, 068/1568, 068/1562, 068/1565, 068/1579, 068/1673, 068/1639, 068/1640, 068/1641 கொண்ட கடைகளின் உரிமையாளர்கள் வேறு கடைகளை நடத்தி வருவதாக தெரிவித்ததை அடுத்து ஆணையர் அவர்களின் உத்திரவின்படி மேற்படி கடைகளின் குத்தகைதாரர்களுக்கு 12/12/2022ல் அறிவிப்பு தயார் செய்யப்பட்டு சார்வு செய்யப்பட்டது. இதில் வரிவிதிப்பு எண்கள்.068/2099, 068/2100, குத்தகைதாரர் மட்டும் நிலுவை தொகையை முழுமையாக செலுத்தியும் மற்றொரு வரிவிதிப்புஎண்.068/2101க்கு பகுதி தொகை மட்டும் செலுத்தாமல் நிலுவை வைத்துள்ளார். மற்ற நபர்களுக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டும் நாளது தேதிவரை நிலுவை தொகை செலுத்தவில்லை. மேலும் கடந்த 16/06/2023ம் தேதிய பொறியாளர் பிரிவின் குறிப்பில் உட்புற சந்தை பகுதியில் பன்றி இறைச்சி கடை முதல் மகேந்திரா

எலக்ரிகல்ஸ் கடை வரை உள்ள 223 எண்ணிகையிலான கடைகள் இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதியாக வாகன நிறுத்துமிடத்துடன் கூடிய புதிய கடைகள் கட்டப்பட உள்ளதால், மேற்படி இடத்தில் செயல்பட்டு வரும் கடைகளை காலி செய்து தருமாறு கோரப்பட்டுள்ளதாலும், குத்தகைதாரர்களின் சரியான விபரங்களை அறிய முடியாததாலும் பின்வரும் பட்டியலில் கண்டுள்ள கடைகளின் கேட்பினை தள்ளுபடி செய்ய மன்றத்தின் அனுமதிக்கு

| Sl. No. | Assessment No | Shop No | Name | Due with Penalty Rs. |
|---|---|---|---|---|
| 1 | 068/2105 | 4, Charring Cross | J. Mani | 1128372 |
| 2 | 068/2104 | 3, Charring Cross | Ashok Kanth | 1137653 |
| 3 | 068/2742 | 15, Agraharam | Easwaran | 399567 |
| 4 | 068/2063 | 5, Charring Cross | Lakshmanan | 661426 |
| 5 | 068/2069 | 12, Charring Cross | Nanjundan | 678730 |
| 6 | 068/2073 | 16, Charring Cross | Vijayaraj | 528076 |
| 7 | 068/2074 | 17, Charring Cross | I. Viyay | 604158 |
| 8 | 068/2066 | 9, Charring Cross | A.S. Mani | 561660 |
| 9 | 068/2079 | 22, Charring Cross | Ericksamson | 756010 |
| 10 | 068/2093 | 2, Charring Cross | K. Sivraman | 727079 |
| 11 | 068/2101 | 10 Charring Cross | G. Sunila | 36899 |
| 12 | 068/2082 | 25 Charring Cross | Sethumadhavan | 701676 |
| 13 | 068/1565 | 3, U.M.C Market | Mohammed Zakaria | 260711 |
| 14 | 068/1579 | 17, U.M.C Market | Abdul Raheem | 413443 |
| 15 | 068/1574 | 11, U.M.C Market | K.M. Abdul Saleem | 451953 |
| 16 | 068/1571 | 5, U.M.C Market | SaleemBasha | 554687 |
| 17 | 068/1570 | 4, U.M.C Market | Ramaswamy | 574858 |
| 18 | 068/1568 | 1, U.M.C Market | Ashok Kumar | 474610 |
| 19 | 068/1503 | 4/7 U.M.C Market | S. Yogeshwari | 523628 |
| 20 | 068/1673 | 29/130 U.M.C Market | Vimal Kumar | 523586 |
| 21 | 068/1771 | 9/272 U.M.C Market | Ashraf Ali | 279353 |
| 22 | 068/1773 | 11/274 U.M.C Market | Ashraf Ali | 279353 |
| 23 | 068/1502 | 3/6 U.M.C Market | R.S. Jothimani | 572571 |
| 24 | 068/2072 | 5, Charring Cross | Ericksamson | 613410 |
| 25 | 068/2333 | 29/670 U.M.C Market | Venugopal | 1111595 |
| 26 | 068/2328 | 26/667 U.M.C Market | Srinivasan | 771663 |
| 27 | 068/2353 | 9/650 U.M.C Market | RamaiyaChettiyar | 450714 |
| 28 | 068/2343 | 1/679 U.M.C Market | Haneefa | 408426 |
| 29 | 068/1740 | 12/161 U.M.C Market | Govindaraj | 1034695 |
| 30 | 068/1741 | 13/162 U.M.C Market | K. Ethiraj | 1034695 |
| 31 | 068/1737 | 9/158 U.M.C Market | Muthu Krishnan | 1097707 |
| 32 | 068/1738 | 10/159 U.M.C Market | Muthu Krishnan | 1107839 |
| 33 | 068/1617 | 16A U.M.C Market | Head pucab Associate | 328837 |
| 34 | 068/1652 | 7/108 U.M.C Market | Kandasamy | 486778 |
| 35 | 068/1589 | 6/67 U.M.C Market | C. MohideenKutti | 517271 |
| 36 | 068/1588 | 5/66 U.M.C Market | Ismail Kutti | 502095 |
| 37 | 068/1546 | 10/39 U.M.C Market | Abdul Salam | 641436 |
| 38 | 068/1513 | 2 U.M.C Market | K. Srinivasan | 197983 |

| | | | | |
|---|---|---|---|---|
| 39 | 068/1615 | 1 U.M.C Market | Sebastian | 299551 |
| 40 | 068/1627 | 8/82 U.M.C Market | Kuppuraj | 575378 |
| 41 | 068/1629 | 10/84 U.M.C Market | Mohammed Ilayas | 580796 |
| 42 | 068/1644 | 26/100 U.M.C Market | Noor | 528921 |
| 43 | 068/1638 | 20/94 U.M.C Market | Ponnuswamy | 517630 |
| 44 | 068/1744 | 1/165 U.M.C Market | V.C. Jose | 3118080 |
| 45 | 068/1511 | 1 U.M.C Market | Karuppuswmay | 191265 |
| 46 | 068/1591 | 8/69 U.M.C Market | V.Sivadasan | 492705 |
| 47 | 068/2536 | 61/446 U.M.C Market | SumaiyaBegam | 799437 |
| 48 | 068/2532 | 10/825 U.M.C Market | John Felicks | 765533 |
| 49 | 068/2531 | 9/824 U.M.C Market | Vasudevan | 731059 |
| 50 | 068/2528 | 36/120U.M.C Market | Arjunan | 740068 |
| 51 | 068/2522 | 30/119 U.M.C Market | Bashir | 651236 |
| 52 | 068/2431 | 15U.M.C Market | Prema | 468374 |
| 53 | 068/2432 | 16 U.M.C Market | Kalavathi | 508633 |
| 54 | 068/1086 | 15/709 U.M.C Market | A. Venkatraj | 220739 |
| 55 | 068/1079 | 8/702 U.M.C Market | KolanthaiChettiar | 225274 |
| 56 | 068/1054 | 43/614 U.M.C Market | N. Govindaraj | 158712 |
| 57 | 068/1052 | 40/612 U.M.C Market | N. Govindaraj | 146578 |
| 58 | 068/1639 | 21/95 U.M.C Market | PalaniswamyGounder | 517268 |
| 59 | 068/1640 | 22/96 U.M.C Market | PalaniswamyGounder | 517268 |
| 60 | 068/1562 | 2 U.M.C Market | N. Venketesh | 585172 |
| 61 | 068/1666 | 22/123 U.M.C. Market | Thangaraj | 547508 |
| 62 | 068/2339 | 12/653 U.M.C. Market | KulandhaiChettiar | 420600 |
| 63 | 068/2085 | 28 U.M.C. Market | Dinesh Kumar | 470892 |
| 64 | 068/2083 | 26U.M.C. Market | Petram | 5058531 |
| 65 | 068/2103 | 2 Charing Cross | Karthigeyan | 1072727 |
| 66 | 068/2735 | 8 Agraharam | DhoulathNisha | 307150 |
| 67 | 068/1871 | 20/353 U.M.C. Market | Ken John | 179818 |
| 68 | 068/1415 | 22/1242 U.M.C. Market | Refeek | 316275 |
| 69 | 068/1573 | 10 U.M.C. Market | S. Robert | 643418 |
| 70 | 068/1572 | 6 U.M.C. Market | Selvamani | 327409 |
| 71 | 068/1641 | 23/97 U.M.C. Market | Kittusamy | 279551 |
| 72 | 068/1623 | 4/78 U.M.C. Market | K. Arun | 589639 |
| 73 | 068/1630 | 11/85 U.M.C. Market | Krishnan | 462956 |
| 74 | 068/1053 | 41/613 U.M.C. Market | Govindaraj | 161770 |
| 75 | 068/1085 | 14/708 U.M.C. Market | Varadarajan | 244715 |
| 76 | 068/1335 | 13/182 U.M.C. Market | Abdul Rake | 113749 |
| 77 | 068/1441 | 6/699A U.M.C. Market | P. Jayaraman | 203164 |
| 78 | 068/1772 | 10/273 U.M.C. Market | ME. Asaraf Ali | 288975 |
| | | | Total | 48163727 |

மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள வரிவிதிப்பு எண்களுக்கான வாடகை நிலுவை தொகைரூ.4,81,63,727/-ஐ கேட்பிலிருந்து தள்ளுபடி செய்ய நகரமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்படி நிலுவைத் தொகையை ரூ.4,81,63,727/-ஐ கேட்பிலிருந்து தள்ளுபடி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

6. உதகமண்டலம் நகராட்சி பகுதியில் புதிதாக கட்டிடம் கட்டுவதற்கு நகராட்சியில் கட்டிட அனுமதி கோரி பெறப்படும் கட்டிட விண்ணப்பங்களுக்கு உரிம கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்கள் செலுத்துவது தொடர்பாக, திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 217சி (1) ன் படி, புதி ய உரிமக் கட்டணங்களை 1/4/2018 முதல் நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.

அதனை உதகமண்டலம் நகராட்சி நகரமன்றம் தனது தீர்மான எண்.658, நாள்.31.1.2018 மூலம் ஏற்றுக் கொண்டுள்ளது. தற்போது உரிமக் கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டு ஐந்து ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் கட்டணங்கள் மிகவும் குறைவாக உள்ளதாகவும் அதனை உயர்வு செய்ய மேல் நடவடிக்கை எடுக்கக்கோரியும் தணிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிதி நிலையை மேம்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளின் சட்டம் 1998 பிரிவு 140 ன் படி பெறப்படும் விண்ணப்பம் மீது கட்டிட உரிமக் கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்களை மறு நிர்ணயம் செய்து (மற்றும் அரசிதழில் செய்தி வெளியீடு செய்து தினத்திலிருந்து நடைமுறைக்கு அமல்படுத்தப்படும்) தொடர்பாக கீழ்க்கண்டவாறு பிரேரணை தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | தொகைவிதிக்கப்படவேண்டியதன் விவரம் | தற்போதைய கட்டணவிகிதம் (ரூ) | திருத்திய கட்டண விகிதம் (ரூ) | பரப்பளவு/ இனம் | எவ்வளவுகாலத்திற்கு |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | மனை அங்கீகாரம் (குடியிருப்பு) (Site approval) | 600.00 | 1200.00 | ஒரு மனைக்கு | ஒருமுறை |
| 2 | மனை அங்கீகாரம் ('AAA' குழுவிற்கு அனுப்பும் கோப்பு) குடியிருப்பு அல்லாதது | 1500.00 | 3000.00 | ஒருமனைக்கு | ஒருமுறை |
| 3 | கூராய்வுக் கட்டணம் | 400.00 | 800.00 | ஒருமனைக்கு | ஒருமுறை |
| 4 | குடியிருப்பு கட்டிடம் – உரிமக் கட்டணம்<br>1. தரைத்தளம்<br>2. முதல்மாடிகட்டிடம்<br>3. ஒன்றுக்கு மேற்பட்ட | 60.00 | 120.00 | 1 ச.மீ | 1 ஆண்டு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | குடியிருப்பு மற்றும் குடியிருப்புடன் கலந்துமற்ற உபயோகக் கட்டிடத்ற்கு (AAA) கோப்பிற்கு | 80.00 | 160.00 | 1 ச.மீ | 1 ஆண்டு |
| 5 | குடியிருப்புஅல்லாதகட்டிடம் (‘AAA’ குழு அனுமதிபெறும் கட்டிடங்கள்) | 120.00 | 240.00 | 1 ச.மீ | 1 ஆண்டு |
| 6 | சேவைகட்டணம் | 4000.00 | 8,000.00 | 1 இனத்திற்கு | ஒருமுறை |
| 7 | தடுப்புசுவர் கட்ட | 50.00 | 100.00 | ஒருமீட்டருக்கு | 1 ஆண்டு |
| 8 | கழிவறை | 300.00 | 500.00 | இனத்திற்கு | 1 ஆண்டு |
| 9 | குளியலறை | 300.00 | 500.00 | இனத்திற்கு | 1 ஆண்டு |
| 10 | குளியலறை (ம) கழிவறை | 300.00 | 500.00 | இனத்திற்கு | 1 ஆண்டு |
| 11 | செப்டிக் டேங்க் | 500.00 | 1000.00 | இனத்திற்கு | 1 ஆண்டு |
| 12 | கட்டிடவரைபடங்கள்உண்மைநகல்வழங்க | 500.00 | 1000.00 | ஒருதொகுப்பு | ஒருமுறை |
| 13 | நிலஉபயோகசான்றுவழங்குதல் | 500.00 | 1000.00 | ஒருதொகுப்பு | ஒருமுறை |
| 14 | Master Plan, Town Map, வரைபடங்களைஅலுவலகத்தில்நகல்பெற | 1000.00 | 2000.00 | ஒருவரைபடம் | ஒருமுறை |
| 15 | TOPO Plan நகல்பெற | 500.00 | 1000.00 | ஒருவரைபடம் | ஒருமுறை |
| 16 | வரைபடவரைவாளர் (LBS)<br>1. பதிவுக்கட்டணம்<br>2. உரிமக்கட்டணம்<br>3. வரைபட வரைவாளர் உரிமம் புதுப்பிக்க கட்டணம் | <br><br>2000.00<br>3000.00<br>1500.00 | <br><br>5000.00<br>5000.00<br>3000.00 | | <br><br>ஒருமுறை<br>ஒருமுறை<br>ஒவ்வொருவருடமும் |
| 17 | மழைநீர் சேகரிப்புத்தொட்டிஅமைக்க<br>1.கட்டிடப்பரப்பு1500 ச.அ அமைக்க<br>2. கட்டிடப்பரப்பு 1500 முதல் 2690 ச.அ வரை<br>3. கட்டிடப்பரப்பு 2690 ச.அடிக்குமேல் (‘AAA’கோப்பு) | <br>3000.00<br>5000.00<br>8000.00 | <br>5000<br>10000<br>15000 | <br>ஒருஇனத்திற்கு<br>ஒருஇனத்திற்கு<br>ஒருஇனத்திற்கு | <br>ஒருமுறை<br>ஒருமுறை<br>ஒருமுறை |
| 18 | அனுமதியின்றி துவங்கப்பட்ட கட்டிடங்களுக்கு, அவை உரிய கட்டிட விதிகளுக்கு உட்பட்டிருப்பின் அதற்கான | | வசூலிக்கப்பட வேண்டிய உரிமக் கட்டணங்களின் இருமடங்கு | | ஒருமுறை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உரிமக் கட்டணம் | | | | |
| 19 | கட்டிட உரிமத்தைப் புதுப்பிக்ககாலம்கடந்துவிட் டால்செலுத்தப்படவேண்டிய அபராதக்கட்டணம் | | ்ரிமம் புதுப்பித்தல் கட்டணத்துடன் 100% கூடுதலாக வசூலிக்கப்படும் | | |
| 20 | மராமத்து பணிகட்டணத் | | 60 | 1 ச.மீ | ஒருமுறை |

**அலுவலக குறிப்பு**

எனவே, நகராட்சி நிதி நிலையை மேம்படுத்தும் பொருட்டு கட்டிட உரிமக் கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்களை மறு நிர்ணயம் செய்யமன்றம் ஒப்புதல்வழங்கலாம்.

ந.க.எண்.1293/2008/எப்1.

**7.** உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 Bulk Waste Generatorகள் நகராட்சியில் பதிவு செய்தல் SWM Rules 2016 கடைபிடித்தல் தினசரி தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் அறிவிப்பு வழங்குதல் தொடர்பாக. நகராட்சி நிர்வாக இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.3935/2021/பி1, நாள்.29.05.2023ன் படி திடக்கழிவு மேலாண்மை 2016ன் கீழ் நாளொன்றிக்கு 100 கிராமிற்கு மேல் திடக்கழிவுகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் / குடியிருப்புகள் / வணிகம் / சமூக கட்டமைப்புகள் நகராட்சியில் பதிவு செய்து கொள்ளவும். SWM Rules 2016ஐ கடைபிடிக்கவும் இணைப்பில் உள்ள அறிவிப்பை தினசரி தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் சிறிய அளவில் விளம்பரம் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**8.** உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட தகரபேருந்து நிலையம் செல்லும் நடைபாதை மற்றும் மழைநீர் கால்வாய், ஜெயின் கோவில் பின்புறம் உள்ள நடைபாதை பழுதடைந்துள்ளதால் நடைபாதை மற்றும் மழைநீர் கால்வாய் சீரமைத்து தரும்படி நகரமன்ற தலைவர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார். எனவே மேற்கண்ட இடத்தில் நடைபாதை மற்றும் மழைநீர் கால்வாய் சீரமைக்க நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**9.** முதலமைச்சரின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் **1** முதல் **5**ம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் செல்லும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் அனைத்து நகராட்சிகளிலும் செயல்படுத்துவதற்கு இடம் தேர்வு செய்து அப்பகுதிகளில் ஒருங்கிணைந்த சமையற்கூடம் அமைய கட்டிடம் கட்டகோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**17404/2022**/எப்**1**, நாள்.**10/03/2023**ல் கடிதம் பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட ஸ்டோன்ஹவுஸ் பகுதியில் உள்ள நகராட்சி கட்டிடம் அருகில் புதியதாக கட்டிடம் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**18.00**/—இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மான எண்.**1078**, நாள்.**30/03/2023**ல் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு பணி நடைபெற்றது. பணி நடைபெறும் சமயத்தில் மேற்கண்ட கட்டிடத்தின் சுற்றுச்சுவர்கள் மிகவும் பழமை வாய்ந்ததாக உள்ளதால் அவர்களை இடித்து உட்புறத்தில் கூடுதல் அறைகள் அமைக்கவும் மற்றும் சமையல் செய்வதற்கு தேவையான Gas Connection அமைக்கவும் இதனால் ஏற்படும் மதிப்பீட்டுத் தொகை ரூ.**24**/— லட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி அவசிய பணியாக உள்ளதாலும் உடனடியாக செய்ய வேண்டியுள்ளதாலும் ஏற்கனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.எஸ்.நாகராஜ் அவர்கள் மூலம் செய்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

10. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகரபேருந்து நிலையம் செல்லும் நடைபாதை மற்றும் மழைநீர் கால்வாய், ஜெயின்கோயில் பின்புறம் உள்ள நடைபாதை பழுதடைந்துள்ளதால் நடைபாதை மற்றும் மழைநீர் கால்வாய் சீரமைத்து தரும்படி நகரமன்ற தலைவர் அவர்கள் கோரிக்கைவிடுத்துள்ளார். எனவே மேற்கண்ட இடத்தில் நடைபாதை மற்றும் மழைநீர் கால்வாய் சீரமைக்க நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**11.** உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட அப்பர் பஜார் பகுதியில் (**5+5** எண்கள் கொண்ட) பொதுக் கழிப்பிடம் அமைந்துள்ளது. மேற்கண்ட பகுதியில் சுமார் **60** எண்கள் குடியிருப்புகள் அமைந்துள்ளது. இக்குடியிருப்புகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பிடம் அனைத்து குடியிருப்புகளிலும் கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும் இப்பகுதியில் அமைந்துள்ள பொதுக்கழிப்பிடத்தின் வெளிப்பகுதியில் சமூக விரோதிகள் மிகவும் அசுத்தம் செய்வதுடன் இப்பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலையும் ஏற்படுகிறது. இக்கழிவறையானது சாலை ஓரத்தில் அமைந்துள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதியும்

நகராட்சி நிர்வாகத்திற்கு வருமானம் ஈட்டும் வண்ணமும் மேற்கண்ட இடத்தில் உள்ள பொதுக்கழிப்பிட கட்டிடத்தை இடித்து கழிவறையுடன் கூடிய வணிக வளாகம் அமைக்க நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**12.** இந்நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை உட்புறம் மற்றும் வெளிப்புற பகுதியில் இந்நகராட்சியின் வருவாய் உதவியாளர், சிறப்பு வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் அலுவலர் ஆகியோரால் நேராய்வு செயப்பட்டதில் கீழ்காணும் பட்டியலில் கண்டுள்ள வரிவிதிப்பு எண்கள் கொண்ட கடைகள் ஏதும் செயல்படுவதில்லை என கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வரிவிதிப்பு எண்களுக்கான கேட்பினை கணணியிலிருந்து தள்ளுபடி செய்ய நகரமன்றஅனுமதி வேண்டப்படுகிறது.

| வ எண் | வரிவிதிப்பு எண் | பெயர் | நிலுவைவருடம் | | தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 068/22058 | விஜயக்குமார் எம் | 2000-01 April | 2022-23 Jun | 223847 |
| 2 | 068/22059 | சங்கர் பி | 2018-19 April | 2022-23 Jun | 149224 |
| 3 | 068/22063 | பென்னோ எஸ் பி | 2018-19 April | 2022-23 Apr | 88953 |
| 4 | 068/22066 | ராதாகிருஷ்ணன் வி | 2000-01 April | 2022-23 Apr | 347389 |
| 5 | 068/22068 | ஆல்துரைகே ஆர் | 2018-19 April | 2022-23 Apr | 88953 |
| 6 | 068/22069 | முகேஷ் | 2018-19 April | 2022-23 Apr | 88953 |
| 7 | 068/22070 | பாரூக் | 2004-05 April | 2022-23 Apr | 255966 |
| 8 | 068/22071 | கஸ்துாரிபாய் | 2018-19 April | 2022-23 Apr | 88953 |
| 9 | 068/22072 | கார்த்திகேயன் | 2000-01 April | 2022-23 Apr | 439752 |
| 10 | 068/22074 | செல்வராஜ் எஸ் கே | 1999-2000 April | 2022-23 Apr | 489267 |
| 11 | 068/22075 | பிரான்சிஸ் | 2018-19 April | 2022-23 Apr | 88990 |
| 12 | 068/22076 | வரதராஜன் என் | 2018-19 April | 2022-23 Apr | 88990 |
| 13 | 068/22077 | செல்வராஜ் எஸ் கே | 2018-19 April | 2022-23 Apr | 88990 |
| 14 | 068/22083 | கங்காதரன் | 2000-01 April | 2022-23 Apr | 62137 |
| 15 | 068/22084 | புட்டம்மாள் | 2018-19 April | 2022-23 Apr | 88990 |
| 16 | 068/22085 | மெர்சிராஜகுமாரி | 2018-19 April | 2022-23 Apr | 88990 |
| 17 | 068/22089 | ராமமூர்த்தி டி எம் | 2000-01 April | 2022-23 Apr | 112158 |
| 18 | 068/22090 | சாந்தக்குமார் ஜி | 2002-03 April | 2022-23 Apr | 145188 |
| 19 | 068/22091 | பி பச்சையப்பன் | 2002-03 April | 2022-23 Apr | 171254 |
| 20 | 068/22093 | முனைவர் | 2000-01 April | 2022-23 Apr | 270886 |
| 21 | 068/22095 | இந்திராணி | 2000-01 April | 2022-23 Apr | 360114 |
| 22 | 068/22096 | புட்டுசாமி எஸ் | 2000-01 April | 2022-23 Apr | 297494 |
| 23 | 068/22101 | மகாதேவன் ஆர் | 2000-01 April | 2022-23 Apr | 222333 |
| 24 | 068/22108 | ரங்கசாமிகே | 1999-20 April | 2022-23 Apr | 174416 |
| 25 | 068/22109 | ஈஸ்வரன் | 1999-20 April | 2022-23 Apr | 188476 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 26 | 068/22110 | ரங்கசாமி | 1999-20 April | 2022-23 Apr | 190784 |
| 27 | 068/22111 | ராமச்சந்திரன் | 1997-1998 April | 2022-23 Apr | 178833 |
| 28 | 068/22113 | சிவக்குமார் ஆர் | 2001-02 April | 2022-23 Apr | 456585 |
| 29 | 068/22120 | பாபுஎல் | 2001-02 April | 2022-23 Apr | 244814 |
| 30 | 068/22124 | கிருஷ்ணமூர்த்தி பி | 2018-19 April | 2022-23 Apr | 108295 |
| 31 | 068/22125 | அப்துல்ரசாக் | 1999-20 April | 2022-23 Apr | 227608 |
| 32 | 068/22126 | சண்முகம் | 1999-20 April | 2022-23 Apr | 340077 |
| 33 | 068/22127 | எல்ராமன் | 2003-04 April | 2022-23 Apr | 311140 |
| 34 | 068/22128 | முருகேஷ்எல் | 1999-20 April | 2022-23 Apr | 557587 |
| 35 | 068/22129 | முருகேஷ்எல் | 1999-20 April | 2022-23 Apr | 382539 |
| 36 | 068/22144 | ராஜன் பிரபு | 1996-97 Apr | 2022-23 Apr | 41889 |
| 37 | 068/22151 | அப்துல்சலீம் | 1998-99 Apr | 2022-23 Apr | 24498 |
| 38 | 068/22158 | ரவிபிரகாஷ் | 1996-97 Apr | 2022-23 Apr | 23226 |
| 39 | 068/22163 | பர்னபாஸ் | 1998-99 Apr | 2022-23 Apr | 35110 |
| 40 | 068/22165 | ராதாகிருஷ்ணன் வி | 2001-02 Apr | 2022-23 Apr | 1539796 |
| 41 | 068/22166 | நஞ்சன் ஐ என் | 1997-98 Apr | 2022-23 Apr | 1035090 |
| 42 | 068/22168 | பாலகிருஷ்ணன் பி கே | 2018-19 Apr | 2022-23 Apr | 763021 |
| 43 | 068/22169 | போஜன் | 1998-99 Apr | 2022-23 Apr | 1261981 |
| 44 | 068/22170 | ராதாகிருஷ்ணன் வி | 1998-99 Apr | 2022-23 Apr | 317697 |
| 45 | 068/22171 | சத்தியமூர்த்தி எஸ் | 1998-99 Apr | 2022-23 Apr | 469630 |
| 46 | 068/22172 | போஜன் | 1998-99 Apr | 2022-23 Apr | 906084 |
| 47 | 068/22173 | பிரியாலார்ட் | 1997-98 Apr | 2022-23 Apr | 785927 |
| 48 | 068/222169 | சரவணன் எ | 2018-19 April | 2022-23 Apr | 614803 |
| 49 | 068/2183 | சியாமலாதேவி | 2017-18 April | 2022-23 Jun | 125716 |
| 50 | 068/2815 | வெங்கட்ராஜ் | 2017-18 April | 2022-23 Apr | 86860 |
| 51 | 068/1309 | குணசேகரன் என் வி | 2017-18 May | 2021-22 Nov | 35052 |
| 52 | 068/1318 | எ ஆர் கணேஷ்குமார் | 2017-18 May | 2021-22 Nov | 42840 |
| 53 | 068/1320 | பாபுஎடி | 2017-18 May | 2021-22 Nov | 22068 |
| 54 | 068/2940 | மொய்தீன் | 2018-19 April | 2021-22 Nov | 20190 |
| 55 | 068/3654 | குஞ்சம்மாள் | 2018-19 April | 2021-22 Nov | 11364 |
| 56 | 068/3655 | சின்னம்மாள் | 2018-19 April | 2021-22 Nov | 11364 |
| 57 | 068/1446 | பாலசுந்தரம் | 2018-19 April | 2022-23 Mar | 18354 |
| 58 | 068/2520 | ஜேக்கப் கே எப் | 2018-19 April | 2021-22 Nov | 368847 |
| 59 | 068/BS04/00001 | நூர்ஜகான் | 2018-19 April | 2019-20 Apr | 59750 |
| 60 | 068/BS04/00034 | நூர்ஜகான் | 2017-18 Feb | 2020-21 Mar | 418250 |
| 61 | 068/1990 | நஞ்சன் சி | 2018-2019APR | 2021-22NOV | 18966 |
| 62 | 068/1991 | கண்ணம்மாள் | 2018-2019APR | 2021-22NOV | 18966 |
| 63 | 068/2005 | ராமசாமிமுதலியார் | 2018-2019APR | 2021-22NOV | 23984 |
| 64 | 068/2060 | சேகர் ஜே | 2021-2022APR | 2022-2023JUN | 351258 |
| 65 | 068/2064 | சேகர் ஜே | 2000-2001APR | 2022-2023JUN | 384529 |
| 66 | 068/2086 | கோவிந்தராஜ் என் | 2001-2002MAR | 2022-2023JUN | 185844 |
| 67 | 068/2087 | கோவிந்தராஜ் என் | 2001-2002MAR | 2022-2023JUN | 128923 |
| 68 | 068/2088 | அருண்பிரசாத் | 2001-2002MAR | 2022-2023JUN | 75045 |
| 69 | 068/2170 | சண்முகசுந்தரம் | 2005-2006MAR | 2022-2023JUN | 1595151 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 70 | 068/2171 | கோவிந்தராஜ் | 2005-2006MAR | 2022-2023JUN | 1112392 |
| 71 | 068/2530 | அடைப் மாஷன் | 2018-2019APR | 2022-2023JUN | 82364 |
| 72 | 068/2115 | சிவக்குமார் ஆர் | 2002-2003MAR | 2022-23MAR | 566866 |
| 73 | 068/2094 | டி எ பாலகிருஷ்ணன் | 2004-2005mar | 2022-2023jul | 351689 |
| 74 | 068/2078 | ஜான் பாஸ்கோ | 2007-2008APR | 2021-22NOV | 36568 |
| 75 | 068/1512 | ஆர்.மணி | 2018-19 april | 2022-23 Mar | 77098 |
| | | **மொத்தம்** | | | **21757975** |

**கீழ்கண்ட அரசுதுறை அலுவலங்கள் வேறு இடங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டு நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுவிட்ட நிலையில் அவற்றிக்கு தொடர்ந்து கேட்பு எழுப்பப்பட்டுள்ளது. எனவே இத்துறைகளுக்கான வரிவிதிப்பு எண்களை கணணியிலிருந்து நீக்கம் செய்யவும் மற்றும் தவறுதலாக எழுப்பப்பட்ட கேட்பினை தள்ளுபடி செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்க அனுமதிக்கு.**

| **வ எண்** | **வரிவிதிப்பு எண்** | **பெயர்** | **நிலுவைவருடம்** | | **தொகை** |
|---|---|---|---|---|---|
| **1** | **068/2044** | **எல். எப் ஆடிட் அலுவலகம்** | **2008–2009 செப்டம்பர்** | **2020– மார்ச்** | **768916** |
| **2** | **068/2173** | **நீலகிரி மாவட்ட டாஸ்மார்க்** | **2005–2006 மார்ச்** | **2021–2022 நவம்பர்** | **2528669** |
| **3** | **068/2428** | **இந்நகராட்சி சந்தை கண்காணிப்பாளர் அலுவலகம்** | **2018–2019 ஏப்ரல்** | **2021–2022 நவம்பர்** | **86352** |
| **மொத்தம்** | | | | | **3383937** |

| | |
|---|---|
| கடைகள் இன்றி தவறுதலாககேட்புஎழுப்பியது | ரூ. 21757975 |
| அரசுதுறைநிறுவனங்களுக்குதவறாககேட்புஎழுப்பியது | ரூ. 3383937 |
| **மொத்தம்** | **ரூ. 25141912** |

**அலுவலக குறிப்பு –** மேற்காணும் பட்டியலில் குறிப்பிட்டுள்ள தவறுதலாக எழுப்பப்பட்ட கேட்புத் தொகை ரூ.2,51,41,912/–ஐ கணனியிலிருந்து நீக்கம் செய்வதை மன்றம் அனுமதிக்கலாம்.

13. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.27968/2022, நாள்.24/06/2023ல் கோரியுள்ளதன் படி அனைத்து நகராட்சிகளிலும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைக்கும் கட்டிட பணிகள் நடைபெற்று வருவதாலும் அம்மையங்களுக்கு தேவையான Interactive Smart board மற்றும் கணினி கொள்முதல் செய்ய கோரியுள்ளனர். ஆதன் அடிப்படையில் தற்பொழுது காந்தல் பகுதியில் உள்ள அறிவுசார் மையத்திற்கு கணினி மற்றும் Interactive Smart board கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9,00,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணியினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

14. நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.24ல் உள்ள மடப்பள்ளி நாயக்கர் தெரு, கீழ் கோவிந்தன் தெரு லட்சுமி தெருவின் பின்புறம் உள்ள மழைநீர் கால்வாய் மிகவும் பழுதடைந்து உள்ளதால் பொது மக்கள் செல்வதற்கு பாதிப்பு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன்கருதி அப்பகுதியில் மழைநீர் கால்வாய் அமைக்க ஆகும் செலவினத்திற்கும் மேற்கண்ட பணியினை செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

15. நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.9ல் உள்ள மழைநீர் கால்வாய் மிகவும் பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் மழைக்காலங்களில் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். ஏனவே தற்பொழுது பருவ மழை தொடர்ந்து உள்ளதால் மீண்டும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஏனவே பொதுமக்கள் நலன்கருதி அப்பகுதியில் உள்ள பழுதடைந்த கால்வாய்களை சீர் செய்யவும் அதற்கு ஆகும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

16. நகராட்சி எல்லைக்குட்பட்ட வேல்வியூ பகுதியில் உள்ள இந்துக்கள் மையானம் செல்லும் சாலை மிகவும் பழுதடைந்து முட்புதர்கள் வளர்ந்து உள்ளதால் சடலங்களை எடுத்து செல்வதற்கும் மழைக்காலங்களில் பொதுமக்கள் செல்வதற்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன்கருதி பழுதடைந்த நடைபாதை சீர் செய்ய ஆகும் செலவினத்திற்கும் அப்பணியினை வரும் திட்ட நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

17. நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.33ல் உள்ள தலையாட்டிமந்து பகுதியில் உள்ள பிரதான சாலை அருகில் உள்ள மண்திட்டு சரிந்து உள்ளதாலும், அப்பகுதியில் குடிநீர் குழாய் மற்றும் கழிவுநீர் செல்லும் குழாய்கள் உள்ளதாலும் பாதிப்பு ஏற்படுகிறது. மற்றும் அந்நடைபாதை வழியாக பொதுமக்கள் செல்வதற்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன்கருதி அப்பகுதியில் தடுப்புசுவர் அமைக்கவும் மற்றும் அதற்கு ஆகும் செலவினத்திற்கும் பணி செய்வதற்கும் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

18. நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.25ல் திருவள்ளுவர் காலணி பகுதியில் உள்ள நகராட்சி குடியிருப்பின் பின்புறம் அமைந்துள்ள தடுப்புசுவர் மிகவும் பழுதடைந்து உள்ளதால் அருகில் உள்ள வீடுகளுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. எனவே பழுதடைந்த தடுப்புசுவரை அகற்றி அப்பகுதியில் புதியதாக தடுப்புசுவர் அமைக்க ஏற்படும் செலவினத்திற்கும் மேற்கண்ட பணியினை செய்வதற்கும் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

19. நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.25ல் உள்ள காந்தல் முக்கோணம் பகுதியில் உள்ள விளையாட்டு மைதானத்தில் மழைகாலங்களில் மழைநீர் அனைத்தும் மைதானத்தின் உட்புறத்தில் வருவதால் பள்ளி குழந்தைகள் மற்றும் விளையாட்டு வீரர்கள் விளையாட இயலவில்லை. ஏனவே மேற்கண்ட மைதானத்தின் உட்புறத்தில் பராமரிப்பு பணிகள் செய்வதற்கும் மழைநீர் செல்வதற்கும் சிறிய கால்வாய் அமைக்கவும் அதற்கு ஆகும் செலவினத்திற்கும் மேற்கண்ட பணி செய்வதற்கும் மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

20. நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13ல் உள்ள மாண்டிரோசா காலணி பகுதியில் உள்ள நடைபாதை மிகவும் பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் செல்வதற்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே தற்பொழுது மழைபெய்து வருவதால் அப்பகுதியில் மக்கள் செல்ல இயலாமல் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே மேற்கண்ட நடைபாதையை சீர் செய்யவும் அதற்கு ஆகும் செலவினத்திற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

21. நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.26ல் உள்ள கஸ்தூரிபாய் காலணி பகுதியில் உள்ள வீடுகளுக்கு அருகில் மண்சரிவு ஏற்பட்டு அப்பகுதி மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. மற்றும் தற்பொழுது பருவ மழை தொடர்ந்து உள்ளதால் மீண்டும் அதிகமான மண் சரிவு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன்கருதி அப்பகுதியில் தடுப்புசுவர் அமைக்கவும் அதற்கு ஆகும் செலவினத்திற்கும் மேற்கண்ட பணியினை வரும் திட்ட நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

22. நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.23ல் உள்ள பெட்டம்ஸ் சாலை மிகவும் பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் செல்வதற்கும் பாதிப்பு ஏற்படுகிறது. மற்றும் அச்சாலையின் வழியாக பள்ளி செல்லும் வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்கள் செல்வதாலும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன்கருதி அச்சாலை சீர் செய்யவும் அப்பணியினை வரும் திட்ட நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

23. நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.11ல் உள்ள குமாரசாமி தெரு முதல் சுல்தான்பேட்டை வரை உள்ள கழிவுநீர் குழாய்கள் மிகவும் பழுதடைந்து உள்ளதால் கழிவுநீர் அனைத்தும் சாலையின் மேற்புறத்தில் செல்வதால் பொதுமக்கள் செல்வதற்கு பாதிப்பு ஏற்படுகிறது.

எனவே பொதுமக்கள் நலன்கருதி பழுதடைந்த பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் மழைநீர் கால்வாய் சீர் செய்யவும் அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**24.** நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.32ல் உள்ள பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் கழிவுநீர் தொட்டி மிகவும் பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் பாதிப்பு ஏற்படுகிறது. மற்றும் கழிவுநீர் அனைத்தும் நடைபாதையில் செல்வதால் பொதுமக்கள் செல்வதற்கு பாதிப்பு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன்கருதி அப்பகுதியில் பழுதடைந்த மேன்ஹோல்கள் மற்றும் குழாய்கள் மாற்றி அமைக்க ஆகும் செல்வினத்திற்கும் இப்பணியினை மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**25.** நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.34ல் உள்ள ராம்தாஸ் நகர் பகுதியில் அமைந்துள்ள கான்கிரீட் நடைபாதை மிகவும் பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் செல்வதற்கு பாதிப்பு ஏற்படுகிறது. மற்றும் அச்சாலையானது நொண்டிமேடு பகுதிக்கு செல்லும் குறுக்கு நடைபாதையாக உள்ளதாலும் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. தற்பொழுது பருவமழை அதிகமாக பெய்து வருவதாலும் அந்நடைபாதையை உபயோகிக்க இயலவில்லை. எனவே பொதுமக்கள் நலன்கருதி அந்நடைபாதையை சீர் செய்யவும் அதற்கு ஆகும் செலவினத்திற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**26.** திருவாளர்.அன்பு அறிவு அறக்கட்டளை நிறுவனம், உதகை அவர்கள் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட உதகை நகரில் சுற்றித் திரியும் கால்நடைகளை இவர்களது அன்பு அறிவு அறக்கட்டளை சார்பில் உதகையில் உள்ள இவர்களது இடத்தில் பராமரிப்பு செய்ய இந்நகராட்சியின் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளனர்.

இப்பொருள் தொடர்பாக கால்நடைகளை பராமரிப்பு செய்ய கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அன்பு அறிவு அறக்கட்டளை நிறுவனத்திற்கு அனுமதி அளிக்கலாம்.

1. நகரில் சுற்றித்திரியும் கால்நடைகள் நகராட்சியால் பிடித்து தங்களது நிறுவனத்தாருக்கு ஒப்படைக்கும்பொழுது நல்ல நிலையில் பராமரித்து தக்க போக்குவரத்துடனும் பராமரிக்கப்பட வேண்டும்.

2. கால்நடைகளுக்கு சொந்தமான உரிமையாளரிடம் ஒப்படைக்கும்போது எந்த நிலையில் பிடிக்கப்பட்டதோ அதே நிலையில் கால்நடைக்கு சொந்தமான உரிமையாளர் யார் என்பதை தகுந்த புகைப்பட ஆதாரத்துடன் மற்றும் Insurance Tag (oR) immunisation Tag) ஆகியவற்றுடன் சரிபார்ப்பு செய்து ஒப்படைக்க வேண்டும்.

3. பிடிக்கப்பட்ட கால்நடைக்க ரூ.300/– என்ற விகிதத்தில் அபராத தொகை விதிக்கப்பட்டு அபராத தொகையில் 40 சதவீதம் ரூ.1200/– இந்நகராட்சி கருவூலத்தில் செலுத்தி அத்தொகைக்குண்டான ரசீதினை சம்பந்தப்பட்ட கால்நடை உரிமையாளர் அல்லது பராமரிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும். மேலும் ரூ.1,800/– கால்நடைகளை பராமரிக்கும் அன்பு அறிவு அறக்கட்டளைக்கு பராமரிப்பு தொகையாக பெற்றுக்கொள்ளலாம்.

4. மேற்கண்ட கால்நடை பராமரிப்பு நிறுவனமான அன்பு அறிவு அறக்கட்டளை, இந்த பணிகளுக்காக தகுந்த பராமரிப்பு பதிவேடு மற்றும் அபராதக் கட்டணம் வசூலிக்கும் தொகைக்கான ரசீதுகள் மற்றும் கால்நடைக்கு சொந்தமான உரிமையாளர் மற்றும் பராமரிப்பாளர் இவர்களின் அலைப்பேசி எண் (Mobile Number) மற்றும் ஆதார் அட்டை நகல் அல்லது எண், முகவரி இவற்றினை கால்நடை பராமரிப்பு பதிவேட்டில் பதிந்து இந்நகராட்சிக்கு மாதந்தோறும் சமர்பிக்கப்பட வேண்டும்.

**அலுவலக குறிப்பு**

மேற்படி இப்பொருள் தொடர்பாக உதகமண்டலம் நகராட்சி பொதுசுகாதார பிரிவு, நகராட்சி நகர்நல அலுவலர், சுகாதார ஆய்வாளர் மற்றும் சுகாதார மேற்பார்வையாளர் உள்ளிட்டவர்களிடம் கலந்தாலோசனை செய்யப்பட்டது. அதுசமயம் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட நகரில் சுற்றித் திரியும் மாடு, குதிரை, நாய் ஆகியவற்றை பிடிப்பதற்கும், சுற்றித்திரிவதை தடுப்பதற்கும் நாய்களை (ABC) தகுந்த பணியாளர்கள் நகராட்சியில் இல்லா காரணத்தினால் மாடுகளை பிடித்து அப்புறப்படுத்துவதற்கும் (NGO's) அரசு சாரா அமைப்புகளை அணுகி இந்த பணிகளை ஒப்படைக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. இதற்கான ஆகும் செலவினங்களை பொது நிதி (General Fund) செலவிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

27. உதகமண்டலம் தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலாத் தலமாக திகழ்கிறது இங்கு அதிகளவில் சுற்றுலா பயணிகள் வருகைபுரியும் காரணத்தினால் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளது. அதற்கு ஒரு மாற்றுபாதை அமைக்க நகராட்சிக்கு சொந்தமான சாலைகளை ஒப்படைக்க கடந்த அரசாணைக்கு இணங்க மாற்று பாதையை தேசிய நெடுஞ்சாலை எண். 181 ல் கி.மீ 95/10 ல் பிரிந்து அதாவது ஃபன்சிட்டியில் பிரிந்து அண்ணா காலணி, மஞ்சனக்கொரை பெர்ன்ஹில்பேலஸ், மான்பூங்கா சாலை, சவுத் லேக் சாலை, முக்கோணம், காந்தல் வழியாக பிங்கர்போஸ்ட் அதாவது தேசிய நெடுஞ்சாலை எண்.181ல் கி.மீ 101/4ல் இணைகிறது. தற்போது பரிந்துரை செய்யப்பட்ட மாற்றுப் பாதையின்(புறவழிச்சாலை) நீளம் 10.850கி.மீ ஆகும்.

| **வரிசை எண்** | **சாலையின் பெயர்** | **நீளம்** |
|---|---|---|
| **1** | லவ்டேல்சாலை (அண்ணாநகர் முதல் மஞ்சனக்கொரை) | **3.00 கி.மீ** |
| **2** | தீட்டுக்கல்சாலை (பெர்ன்ஹில் முதல் லேக்வியூ சந்திப்பு) | **1.00 கி.மீ** |
| **3** | பிரிக் பீல்டுசாலை (காந்தல் முக்கோணம் முதல் நிர்மலா மருத்துவமனை வரை) | **1.45 கி.மீ** |
| | **மொத்தம்** | **5.45 கி.மீ** |

மேற்படி உதகை நகராட்சிக்கு சொந்தமான சாலைகளை நெடுஞ்சாலைதுறைக்கு ஒப்படைக்க மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**அனுமதிவழங்கலாம்.**

28. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.6ல் உள்ள டம்ளர்மொடக் பகுதியில் சென்ற ஆண்டு பெய்த கனமழையின் காரணத்தால் வில்லியம் வீடு முதல் சாந்த வீடு வரை உள்ள கழிவுநீர் குழாய் உடைந்து நடைபாதையில் செல்வதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் நோய் தொற்றும் அபாயமும் உள்ளது. மேலும் கழிவுநீர் நடைபாதையில் செல்வதால் பொதுமக்கள் பள்ளி குழந்தைகள் நடந்து செல்ல மிகவும் சிரம்மப்படுகின்றனர். ஏனவே மேற்கண்ட இடத்தில் உள்ள புதிதாக கழிவுநீர் குழாய் பாதாள சாக்கடை குழாய் அமைக்க வேண்டியது அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.50/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**அனுமதிவழங்கலாம்.**

**29.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.17ல் கோத்தகிரி சாலை சேரிங்கிராஸ் சஞ்சய் ஒட்டல் பின்புறம் இருந்து கோடப்பமந்து சால்வாய் வரை உள்ள பாதாள சாக்கடை மேன்ஹோல் மற்றும் பைப்லைன் ஆனது பழுதடைந்தும் உடைந்தும் உள்ளதால் கழிவுநீர் ஆனது கோத்தகிரி சாலையின் ஓரத்தில் சென்று கொண்டு இருக்கிறது. இதனால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் கடை உரிமையாளர்கள் மிகவும் சிரம்மப்படுகின்றனர். மேலும் இவ்விடத்தில் ஒரு இந்தியன் வங்கியும் உள்ளதால் வங்கிக்கு வரும் பொதுமக்கள் மிகவும் சிரம்மப்படுகின்றனர். ஏனவே மேற்கண்ட இடத்தில் பழுதடைந்து உள்ள மேன்ஹோல்கள் மற்றும் பைப்லைன் ஆகியவற்றை புதிதாக மாற்றி அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. ஏனவே அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.6.10/- இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**அனுமதிவழங்கலாம்.**

**30.** உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.8க்கு உட்பட்ட தோப்பலைன் செல்லும் சாலையில் வலது புறத்தில் தற்போது பெய்த மழையினால் மண் திட்டானது சரிந்துவிட்டது. இதனால் இச்சாலையின் வழியாக கனரக வாகனங்கள் மற்றும் சிறிய வாகனங்கள் சென்று வருவதால் சாலையின் ஓரத்தில் மண்திட்டு மேலும் சரிய வாய்ப்புள்ளது. ஏனவே மேற்கண்ட இடத்தில் மழையினால் பழுதடைந்து உள்ள தார் சாலையின் ஓரத்தில் உள்ள மண் திட்டை அகற்றி விட்டு புதிதாக தடுப்புச் சுவர் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. ஏனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.10/- இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**அனுமதிவழங்கலாம்.**

**31.** உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.3ல் உள்ள பாதர்லைன் தோனி பங்களா, ராஜீவ் காலணி மற்றும் சித்தி விநாயகர் பாலணி ஆகிய பகுதியில் குடிநீர் விநியோகத்திற்காக அமைக்கப்பட்ட 2இன்ச் குடிநீர் குழாய் ஆனது 20 வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்டு உள்ளது. இதனால் இந்த குடிநீர் குழாய் ஆனது மழையினால் துருபிடித்து உள்ளதால் பழுதடைந்து உடைந்து உள்ளதால் குடிநீர் விநியோகம் செய்யும்போது குடிநீரானது வீணாகிறது. இதனால் மேற்கண்ட பகுதி மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய முடியாமல்

உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் பழுதடைந்துள்ள 2 இன்ச் குடிநீர் குழாய்க்கு பதிலாக புதிய 2இன்ச் குழாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.50/– இலட்சத்திற்கு நகராட்சி குடிநீர் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**அனுமதிவழங்கலாம்.**

(ஒப்பம்) XXXXX

**நகரமன்ற தலைவர்**

**உதகமண்டலம் நகராட்சி**



ஆணையாளர்,

உதகமண்டலம் நகராட்சி